ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 3.4 – தழைகளும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.4 – தழைகளும்

‡ தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் ⋆
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ் பீலி ⋆
குழல்களும் கீதமும் ஆகி எங்கும் ⋆
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு ⋆
மழைகொலோ வருகின்றதென்று சொல்லி ⋆
மங்கைமார் சாலக வாசல் பற்றி ⋆
நுழைவனர் நிற்பனர் ஆகி ⋆
எங்கும் உள்ளம் விட்டூண் மறந்தொழிந்தனரே ॥ **3.4.1** ॥

வல்லி நுண் இதழ் அன்ன ஆடை கொண்டு ⋆
வசை அறத் திருவரை விரித்துடுத்து ⋆
பல்லி நுண் பற்றாக உடைவாள் சாத்திப் ⋆
பணைக்கச்சுந்திப் பல தழை நடுவே ⋆
முல்லை நல் நறுமலர் வேங்கை மலர் அணிந்து ⋆
பல் ஆயர் குழாம் நடுவே ⋆
எல்லியம் போதாகப் பிள்ளை வரும் ⋆
எதிர் நின்றங்கினவளை இழவேன்மினே ॥ **3.4.2** ॥

சுரிகையும் தெறி வில்லும் செண்டு கோலும் ⋆
மேலாடையும் தோழன்மார் கொண்டோட ⋆
ஒரு கையால் ஒருவன் தன் தோளை ஊன்றி ⋆
ஆநிரையினம் மீளக் குறித்த சங்கம் ⋆
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன் ⋆

மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள் ⋆
அருகே நின்றாள் என் பெண் நோக்கிக் கண்டாள் ⋆
அது கண்டிவ்வூர் ஒன்று புணர்க்கின்றதே ‖ **3.4.3** ‖

குன்றெடுத்தாநிரை காத்த பிரான் ⋆
கோவலனாய்க் குழல் ஊதி ஊதிக் ⋆
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு ⋆
கலந்துடன் வருவானைத் தெருவில் கண்டு ⋆
என்றும் இவனை ஒப்பாரை நங்காய் ⋆
கண்டறியேன் ஏடி ! வந்து காணாய் ⋆
ஒன்றும் நில்லா வளை கழன்று ⋆
துகில் ஏந்திள முலையும் என் வசம் அல்லவே ‖ **3.4.4** ‖

சுற்றி நின்றாயர் தழைகள் இடச் ⋆
சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து ⋆
பற்றி நின்றாயர் கடைத்தலையே ⋆
பாடவும் ஆடக் கண்டேன் ⋆
அன்றிப் பின் மற்றொருவர்க்கென்னைப் பேசல் ஒட்டேன் ⋆
மாலிருஞ்சோலை எம் மாயற்கல்லால் ⋆
கொற்றவனுக்கிவள் ஆம் என்றெண்ணிக் ⋆
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே ‖ **3.4.5** ‖

சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றி மேல் ⋆
திருத்திய கோறம்பும் திருக் குழலும் ⋆
அந்தர முழவத் தண் தழைக் காவின் கீழ் ⋆
வரும் ஆயரோடுடன் வளைகோல் வீச ⋆
அந்தம் ஒன்றில்லாத ஆயப் பிள்ளை ⋆
அறிந்தறிந்திவ் வீதி போதுமாகில் ⋆

பந்து கொண்டான் என்று வளைத்து வைத்துப் ⋆
பவளவாய் முறுவலும் காண்போம் தோழீ ! ॥ **3.4.6** ॥

சாலப் பல் நிரைப் பின்னே தழைக் காவின் கீழ் ⋆
தன் திருமேனி நின்றொளி திகழ ⋆
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தால் அணிந்து ⋆
பல் ஆயர் குழாம் நடுவே ⋆
கோலச் செந்தாமரைக் கண் மிளிரக் ⋆
குழல் ஊதி இசை பாடிக் குனித்து ⋆
ஆயரோடாலித்து வருகின்ற ஆயப் பிள்ளை ⋆
அழகு கண்டென் மகள் அயர்க்கின்றதே ॥ **3.4.7** ॥

சிந்துரப் பொடிக் கொண்டு சென்னி அப்பித் ⋆
திருநாமம் இட்டங்கோர் இலையந் தன்னால் ⋆
அந்தரம் இன்றித் தன் நெறி பங்கியை ⋆
அழகிய நேத்திரத்தால் அணிந்து ⋆
இந்திரன் போல் வரும் ஆயப் பிள்ளை ⋆
எதிர் நின்றங்கினவளை இழவேல் என்ன ⋆
சந்தியில் நின்று கண்டீர் ⋆
நங்கை தன் துகிலொடு சரிவளை கழல்கின்றதே ॥ **3.4.8** ॥

வலங்காதின் மேல் தோன்றிப் பூவணிந்து ⋆
மல்லிகை வனமாலை மௌவல் மாலை ⋆
சிலிங்காரத்தால் குழல் தாழ விட்டுத் ⋆
தீங்குழல் வாய்மடுத்தூதி ஊதி ⋆
அலங்காரத்தால் வரும் ஆயப் பிள்ளை ⋆
அழகு கண்டென்மகள் ஆசைப் பட்டு ⋆

விலங்கி நில்லாதெதிர் நின்று கண்டீர் ⋆
வெள்வளை கழன்று மெய்ம் மெலிகின்றதே ॥ **3.4.9** ॥

‡ விண்ணின் மீதமரர்கள் விரும்பித் தொழ ⋆
மிறைத்தாயர் பாடியில் வீதியூடே ⋆
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக் கண்டு ⋆
இள ஆய்க் கன்னிமார் காமுற்ற வண்ணம் ⋆
வண்டமர் பொழில் புதுவையர் கோன் ⋆
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் ⋆
பண் இன்பம் வரப் பாடும் பத்தர் உள்ளார் ⋆
பரமான வைகுந்தம் நண்ணுவரே ॥ **3.4.10** ॥

அடிவரவு — தழைகளும் வல்லி சுரிகை குன்று சுற்றி சிந்துரம் சால சிந்துரப்பொடி வலம் விண்ணின்மீது அட்டு

தழைகளும் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்